DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous CASE No: C.C. No. 244/13
Preliminary Register

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 14 |
| Name | : | Thirumal Alagu |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.19

முதல் விசாரணை:

நான் தற்போது காவல் துறையில் உதவி ஆணையராக பணிபுரிந்து ஓய்வு பெற்று சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் செக்கானூரணிஅகாவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணிபுரிந்தேன். 9.2.2013ம் தேதி உசிலம்பட்டி தாலுக காநிகுஎண்: 30-13 பிரிவு 279, 337, இதச வழக்கினை சிறப்பு சார்பு ஆய்வாளர் மாறன் அவர்கள் பதிவு செய்து செந்தாமரை சார்பு ஆய்வாளர் அவர்கள் முதல்விசாரணை செய்து வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337, 304(அ) இதசவாக பிரிவு மாறுதல் செய்து என் பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பினை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு மதுரை அரசு மருத்துவமனை சென்று 11.2.13ம் தேதி காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விபத்தில் இறந்த அய்யனார் என்பவரது பிரேதத்தின் மீது விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அது அதசாஆ 7. பின்பு சடலக் கூராய்வு செய்வதற்காக தலைமை காவலர் பால்துரை அவர்கள் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன்.சாட்சிகள்

பாலசுப்பிரமணியன், ரீகன், நாகராஜன், செல்வக்குமார்,அறிவு, பரமசிவம், தெய்வம், பாக்கியலட்சுமி, மாரியப்பன், சந்திரன், பிரேமலதா ஆகியோர்களை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன். எதிரியை10.2.13ம் தேதி உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையம் முன்பு வைத்து 16.00 மணிக்கு கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன். விபத்துக்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகனஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சக்திவேல் என்பவரை விசாரித்து ஆய்வு அறிற்கைகள் பெற்றேன். அவைகள் முறையே அதசாஆ 8 மற்றும் 9. சடலக்கூராய்வு செய்த மருத்துவர் கௌரி சங்கர் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த பிரேத பரிசோதனை சான்று அதசாஆ 10. போக்குவரத்து மேற்பார்வையாளர் செல்வக்குமார் என்பவரை விசாரித்து பணிநியமன சான்று பெற்றேன். அதன்பிறகு வழக்கு கோப்பினை பின்பு வந்த ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

கு.வி.

புகாரில் சம்பவம் இரவு 7.00 மணி அளவில் நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, முதல் 3 சாட்சிகள் பேருந்தில் பயணம் செய்தவர்கள் என்றால் சரிதான். தனக்கு மன்னால் சென்ற இனம் தெரியாத வாகனத்தை முந்தும்போது எதிரே வந்த டிஎன் 67 எம் 6764 என்ற டிராக்டரின் டிரெயிலரில் மோதியது என்றும் மோதியவுடன் டிரைவர் இடதுபக்கமாக திருப்பியதில் பேருந்து தாறுமாறாக ஓடி காட்டுக்குள் சென்று நின்றதாக புகாரிலும் அசா1ன் வாக்குமூலத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரே வந்த வாகனம் எப்படி வந்தது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். டிரெயிலர் என்பது டிராக்டரின் பின்பகுதி என்றால் சரிதான். டிரெயிலரின் முன்பகுதியில் மோதியதா அல்லது பக்கவாட்டில் மோதியதா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் தெருவிளக்குகள் இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவஇடத்தில் விபத்தை ஏற்படுத்திய வாகனமோ விபத்துக்குள்ளான டிராக்டர் டிரெயிலரோ இருந்ததாக வரைபடத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். சாலை விதியை மீறி வலதுபுறத்தில் ஏறி விபத்தை ஏற்படுத்தியதாக சங்கதி இடம் பெறவில்லை என்றால் சரிதான். பொதுவாக முன்னால் செல்லும் வாகனத்தை முந்துவதற்கு பின்னால் செல்லும் வாகனம் வலதுபுறமாக ஏறி செல்லவேண்டும் என்றால் சரிதான். வேகத்தின் அளவு குறிப்பாக கூறப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் உசிலம்பட்டி நகரத்தில் இருந்து 5 கிமீட்டர் தள்ளி உள்ளது என்றால் சரிதான். சாட்சி 1, 2

நபர்கள் வாகனத்தில் எந்த இருக்கையில் அமர்ந்து கொண்டு சென்றார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்தவர் பேருந்தில் இருந்து தூக்கி எறியப்பட்டவர் 70 வயது மதிக்கத்தக்வர் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.இழப்பீடு பெறுவதற்காக கொடக்கப்பட்ட புகாரை அப்படியே வழக்காக பதிவு செய்யப்பட்டதை அப்படியே ஏற்று முதல்விசாரணையை ஒருதலைப்பட்சமாக முடித்து மேல்விசாரணைக்காக வழக்கை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. இனம் தெரியாத வாகனத்தின் டிரைவர் யார் என்று பெயர் குறிப்பிட்டு சாட்சி பட்டியலில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த வாகனம் எந்த வகையைச் சார்ந்தது என்று கூறப்படவில்லை. அந்த வாகனம் சேதமடைந்ததாக வாசகம் இடம் பெறவில்லை. அந்த வாகனம் டிராக்டரில் மோதியதாக சங்கதி இடம் பெறவில்லை என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

/Sd./ Thirumal Alagu

Taken down by me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd./ M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.